யா/உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2014

## அதிபர் அறிக்கை

2014.12.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை
## பாடசாலை தொடர்பான தகவல்கள்

01. பாடசாலையின் ஆரம்பம் :- 1872
02. ஸ்தாபகர் :- சுப்பிரமணியம்இளையதம்பி
03. மாகாணம் :- வடமாகாணம்
04. வலயம் :- வலிகாமம் கல்விவலயம்
05. கோட்டம் :- உடுவில் கல்விக்கோட்டம்
06. பாடசாலை முகவரி :- பிரதேசக் செயலக வீதி,
சுன்னாகம்
07. பாடசாலை குறியீட்டு (ID) இலக்கம் :- 1010027
08. தொகை மதிப்பீட்டு இலக்கம் :- 09214
09. பாடசாலை பரீட்சை இலக்கம் :- 11377
10. கிராம அலுவலர் பிரிவு :- சுன்னாகம் நகரமத்திJ/198
11. பிரதேச செயலாளர் பிரிவு :- வலிகாமம் தெற்கு
12. தேர்தல் தொகுதி :- மானிப்பாய்
13. வகுப்புக்களின் பரம்பல் :- 1 – 5
14. பிரதான மொழி :- தமிழ்
15. பால் வகை :- கலவன்
16. பாடசாலை வகை :- III
17. சம்பளக் கணக்கு இலக்கம் :- 7471245
18. பாடசாலை அபிவிருத்திக் கணக்கு இலக்கம் :-
109-1001-4-0065069
19. பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கு இலக்கம் :-
109-2-001-9-0014019
20. பழைய மாணவர் சங்கக் கணக்கு இலக்கம் :-
109-2-001-9-0016198
21. காணியின் அளவு :- 3 பரப்பு 14 குழி
22. வசதிக்கட்டணக்கணக்கு :- 75900321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை
# பரிசளிப்பு விழா – 2014

| | | |
|---|---|---|
| காலம் | : | 03.12.2014 மு.ப 10.00 மணி |
| இடம் | : | பாடசாலை மண்டபம் |
| தலைவர் | : | திரு.இரா.ஜெயக்குமார் (அதிபர்) |

**ஆசியுரை** பிரம்மஸ்ரீ S. கீதா கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்

**பிரதம விருந்தினர்** திருமதி குகனேஸ்வரி பார்த்தீபன்
(கணக்காளர், வலிகாமம் கல்வி வலயம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**(ஆசிரியைகள்)**

- திருமதி வனிதா ரவிலீலன் (காந்தரூபன் முன்பள்ளி)
- திருமதி அனுசா சிறிகாந் (முத்தமிழ்முன்பள்ளி)
- திருமதி தர்சினி கோணேஸ்வரன் (எம்.எச்.ஏ.முன்பள்ளி)
- திருமதி அகிலா கபில் (கண்ணகி முன்பள்ளி)
- திருமதி உதயமதி மகிழ்ராஜா (தேவகிராமம் முன்பள்ளி)
- செல்வி மயூரி மனோகரன் (கலைவாணி முன்பள்ளி)
- செல்வி சிந்துஜா சண்முகரத்தினம் (கலைவாணி முன்பள்ளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் தூர நோக்கு (VISION)

கிடைக்கக் கூடிய வளங்களை உச்சமாகப் கிடைக்கக் கூடிய வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி, தரமான கல்வியை வழங்குவதன் ஊடாக, உயர்ந்த அறிவும், சிறந்த ஒழுக்கமும் கொண்ட மாணவ சமூகத்தை உருவாக்கல்.

## பாடசாலையின் பணிக்கூற்று (MISSION)

பிரதேசக் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, உயர் சிந்தனையும், ஆழமான அறிவும் நிலைபெறக் கூடிய கல்வியைப் பெற்றுக் கொள்ள சாத்தியமான அனைத்து நுட்பங்களையும் பயன்படுத்துவதும் தரமான கல்வியினூடாக ஆழமான அறிவும் தலைமைத்துவப் பண்பும் கொண்ட மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்பி சமூகத்தின் மேன்மையை அடைய நடவடிக்கையெடுத்தல்.

### மகுட வாசகம்

'கல்வி ஊற்றே மனிதம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

| இல | நிகழ்வு | உத்தேச நேரம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| 1 | விருந்தினர்களை அழைத்துவரல் | 10.00 | 10.05 |
| 2 | தேசியக் கொடியேற்றல் - பிரதமவிருந்தினர் | 10.05 | 10.10 |
| 3 | தேசியக் கீதம் இசைத்தல்<br>1. செல்வி பொ.விதுசா<br>2. செல்வி க.கீர்த்தனா<br>3. செல்வி கு.கபீனா | 10.05 | 10.10 |
| 4 | பாடசாலை கொடியேற்றல் - அதிபர் | 10.10 | 10.15 |
| 5 | பாடசாலைக் கீதம் இசைத்தல்<br>1. செல்வி பொ.விதுசா<br>2. செல்வி க.கீர்த்தனா<br>3. செல்வி கு.கபீனா | 10.10 | 10.15 |
| 6. | மங்கள விளக்கேற்றல்<br>1. பிரதமவிருந்தினர்<br>2. சிறப்பு விருந்தினர்<br>3. அதிபர் | 10.15 | 10.25 |
| 7 | இறைவணக்கம்<br>தேவாரம் கிறிஸ்தவகீதம்<br>1. கீர்த்தனா 1. பொ.விதுசா<br>2. பா.தர்மினி 2. கு.கபீனா | 10.25 | 10.35 |
| 8 | வரவேற்புரை - செல்வி பொ.விதுசா | 10.35 | 10.40 |
| 9 | ஆசியுரை பிரம்மஸ்ரீ கீதா<br>கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்<br>(பிரதமகுரு சிவபூதராயர் ஆலயம்) | 10.40 | 10.50 |
| 10 | அதிபர் அறிக்கை – அதிபர் | 10.50 | 11.00 |
| 11 | சிறப்பு விருந்தினர் உரை – சிறப்புவிருந்தினர் | 11.00 | 11.30 |
| 12 | பிரதம விருந்தினர் உரை – பிரதமவிருந்தினர் | 11.30 | 11.50 |
| 13 | பரிசில் வழங்கல் - விருந்தினர்கள் | 11.50 | 12.10 |
| 14 | நன்றியுரை – திருமதி சுகந்தினி உதயகுமாரன்<br>(ஆசிரியர்) | 12.10 | 12.15 |
| 15 | கலை நிகழ்வுகள் | 12.15 | 12.30 |
| 16 | பாடசாலைக் கீதம் இசைத்தல் | 12.30 | 12.40 |
| 17 | கொடியிறக்கல் | 12.35 | 12.40 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் 2014 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் திருமதி குகனேஸ்வரி பார்த்தீபன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக இவ் வைபவத்தை அலங்கரித்தக் கொண்டிருக்கும் காந்திரூபன் முன்பள்ளி, முத்தமிழ் முன்பள்ளி, வை.எம்.எச்.ஏ முன்பள்ளி, கண்ணகி முன்பள்ளி, தேவகிராமம் முன்பள்ளி, கலைவாணி முன்பள்ளி, காந்தி முன்பள்ளி என்பவற்றின் ஆசிரியப் பெருந்தகைகளே!

ஆசியுரை வழங்கிய சிவ பூதாராயர் தேவஸ்தானத்தில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கீதாகிருஷ்ண மூர்த்தி குருக்கள் அவர்களே! மற்றும் அயல் பாடசாலை அதிபர்களே! மற்றும் ஆசிரியர்களே!, மாணவர்களே! பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, அனைவருக்கும் வணக்கங்கள் உரித்தாகட்டும்.

இப்பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினர் அவர்கள் எமது வலிகாமம் கல்வி வலயத்தின் கணக்காளர். எமக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துவைப்பவர். இவ்வகையில் இவரது வருகை எமக்கு பெரும் மகிழ்ச்சியை தருகிறது.

முன்பள்ளிகளின் ஆசிரியைகள் எம் சிறப்பு விருந்தினர்கள். இவர்கள் எமக்கு வேண்டிய மாணவச் செல்வங்களை தந்து, இப்பாடசாலைக்கு ஆதரவு வழங்குபவர்கள். இவர்களின் வருகையும் எமக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

ஆசியுரை வழங்கிய பிரம்ம ஸ்ரீ கீதா கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை

உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை சுப்பிரமணியம் இளையதம்பி என்பவரால் 1872 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு சாமுவேல் அப்புக்குட்டி மான் என்பவராலும் அவரது மனைவியாராலும் ஆங்கிலக் கல்விக்கு வழிகாட்டியாக மாற்றம் பெற்றது. ஆரம்பத்தில் பரப்பு 1 குழி 14.3 அளவு கொண்ட காணியில் ஆரம்பிக்கப்பட்டது. பின் 2002 ஆம் ஆண்டுபழைய மாணவர் சங்க உதவியுடன் நிலப்பரப்பு 1 குழி 14 வாங்கப்பட்டு இப்பாடசாலையின் முன் முற்றம் விரிவாக்கப்பட்டது. இது முன்னைய அதிபர் திரு.ஜ.விஜயகாந்தன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணி ஆகும்.

நான் இப்பாடசாலையின் அதிபராக 2014.02.03 இல் பெறுப்பேற்று வந்தேன்.

## ஆசிரியர் குழாம்

இப்பாடசாலையில் தற்போது அதிபரை விட 06 ஆசிரியர்கள். உள்ளனர். இவர்களில் ஆரம்ப கல்வி பயிற்சி பெற்றவர்கள் நான்கு பேர். இடைநிலைக் கல்வி பயிற்சி பெற்றவர்கள் (கணிதம், சமயம்) இருவர் உள்ளார். ஆரம்ப கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நால்வரில் திருமதி.க.ஸ்ரீசுதாகரன் பிரசவ விடுமுறையில் உள்ளார். இதே வேளையில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக திருமதி.து.ஸ்ரீதரன் இரு தினங்களில் (செவ்வாய், வியாழன்) கடமையாற்றுகிறார். எனினும் தற்போது அவரும் பிரசவ லீவில் உள்ளார். இப்பாடசாலையின் ஆசிரியையாகவும் பதில் அதிபராகவும் 10.05.2013 ஆம் திகதி முதல் கடமையாற்றி வந்த ஆசிரியை திருமதி.சுபாஜினி கண்ணன் 03.11.2014ஆம் திகதி முதல் வெறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவிட்டார். இவரது பணி சிறக்க வாழ்த்துகிறேன். 10.11.2014 ஆம் திகதி முதல் தொண்டு நோக்கில் இப்பாடசாலையில் கற்பித்து வருகின்ற செல்வி ரா.ரயிந்தினி அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அதிபர், ஆசிரியர் விபரம்

| இல | அதிபர்/ஆசிரியர் பெயர் | இப் பாடசாலைக்கு நியமனம் | கல்வித் தகைமை | தொழில் தகைமை | சேவையும் தரமும் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.இராஜா ஜெயக்குமார் | 03.02.2014 | BA | Dip in Edu | S4S III | |
| 2 | திருமதி.ரோ.கணேஸ்வரி சண்முகநாதன் | 05.04.2013 | கபொ.த உ/த | பயிற்றப்பட்ட (சைகையம்) | SLTS | இடை நிலைக் கல்வி பயிற்சி (சைகையம் 21 |
| 3 | திருமதி.சிவசக்தி நந்தகுமார் | 11.02.2013 | கபொ.த உ/த | பயிற்றப்பட்ட(ஆரம்பக்கல்வி) | SLTS 2II | |
| 4 | திருமதி.சு.உதயகுமாரன் | 02.01.2014 | கபொ.த(உ/த) | BA | Dip in Edu | SLTS 2II |
| 5 | செல்வி ஜெயசிந் செபஸ்தியாம்பிள்ளை | 02.01.2014 | கபொ.த(உ/த) | கற்பித்தலில் டிப்ளோமா | SLTS 3I | |
| 6 | செல்வி ஆனந்தி நடராசா | 14.03.2008 | கபொ.த(உ/த) | பயிற்றப்பட்ட (கணிதம்) | SLTS 3I | |
| 7. | திருமதி கஜேந்திரன் | 02.01.2014 | கபொ.த(உ/த) | பயிற்றப்பட்ட(ஆக) | SLTS 3I | தற்போது பிரசவ லீவு (தற்காலிக இணைப்பு) |
| 8 | திருமதி தயந்திரன் | 24.06.2013 | கபொ.த(உ/த) | பயிற்றப்பட்ட(ஆக) ஆங்கிலம் | 3 I | தற்போது பிரசவ லீவில் (வாரத்தில் 2 நாட்கள்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்கள்

இப்பாடசாலையில் தற்போது 43 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் ஆண்கள் 29 பேர். பெண்கள் 14 பேர். சமயரீதியாக நோக்கும் போது சைவசமயத்தவர்கள் 30 பேரும், கத்தோலிக்கர்கள் 7 பேரும். கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்கள் 7 பேரும் உள்ளனர். பெரும்பாலும் இவர்கள் அனைவரும் சுன்னாகம் தெற்கு (J/196) கிராம அலுவலகர் பிரிவை சேர்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

### பெற்றோர் பங்களிப்பு

பெற்றோர்கள் நாளாந்த கூலிவேலைகளில் பெரும்பாலும் ஈடுபட்டுள்ள போதிலும் அவர்களின் பங்களிப்பு உன்னதமானது. குடும்ப, கோட்ட வலயமட்டப் போட்டிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதில் பெரும்பாலான பெற்றோர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். பாடசாலையின் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளிலும், வைபவங்களிலும் ஒத்துழைப்புத் தருகின்றனர். பாடசாலைக் கூட்டங்களிலும் பங்கெடுக்கின்றனர். இவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

### புலமைப்பரிசில் பெறுபேறுகள்

2014 ஆம் ஆண்டு பரீடசை எழுதிய 10 மாணவர்களில் 05 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். நான்கு பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். செல்வி பொ.விதுசா 132 புள்ளிகள் பெற்றுள்ளார். பரீட்சை எழுதிய 100 மாணவரின் 90% ஆனவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சான்றிதழ் பெற்றுள்ளனர். இவர்களையும் இவர்களுக்கு மனமுவந்து மேலதிக வகுப்புக்களை நடாத்திய ஆசிரியை திருமதி சுகந்தினி உதயகுமாரன் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மதிய உணவு விநியோகம்

பாடசாலையில் இலவச மதிய உணவு வழங்கலிற்கு பொறுப்பாக ஆசிரியை திருமதி சிவசக்தி நந்தகுமார் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார். இவற்றை விட பல்வேறு குடும்ப நிகழ்வுகளை ஒட்டியதாக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளால் விசேட உணவுகள் அவ்வப் போது வழங்கப்படுகின்றன. பச்சை மரக்கறிக் கொடுப்பனவு காலதாமதமாக வருவதும், விறகு பெறுவதில் உள்ள பிரச்சினையையும் நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள். இவ்வருட இறுதியில் (2014.11.25) விறகுகளை இலவசமாக தந்த நல்லூர் - கச்சேரி வீதியில் இயங்கும் 'ரூலிங்' நிறுவனத்திற்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். கொட்டும் மழையிலும் தவறாது வந்து எந்தவித வேதனமும் இன்றி, சமையல் தொண்டர்களாக பணியாற்றும் திருமதி தவமலர் ஜெகநாதன், திருமதி சந்திரவதனா கிருபாநிதி ஆகியோரை இருகரம் கூப்பி நன்றியுடன் வணங்குகிறேன்.

## மாணவர் மன்றங்கள்

மாணவர் மன்றங்களாக தமிழ்மன்றம், சுற்றாடல் மன்றம், சமயமன்றம், அழகியல் மன்றம், ஆங்கில மன்றம் என்பன செயற்பட்டு வருகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் பி.ப 12 மணிக்கு மாணவர் மன்றம் சுழற்சி முறையில் நடைபெற்று வருகின்றது. பல்வேறு சர்வதேச தினங்கள் தொடர்பான நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

## ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

ஆசிரியர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவதில் பாடசாலையின் நலன்புரிச்சங்கம் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சங்கங்கள்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, என்பன சிறப்பாக செயற்படுகின்றன. பழைய மாணவர் சங்கத்தின் உதவியினால் 2002 ஆம் ஆண்டு பரப்பு 1 குழி 14 உள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை பழைய மாணவர்களின் உதவியை தொடர்ந்தும் வேண்டி நிற்கிறது. பா.அ.சங்கத்தின் செயலாளர் திருமதி சி.வசந்தகுமார், பா.அபிவிருத்திக் குழுவின் செயலாளர் திருமதி ஜீ.பாஸ்கரன் ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

### மாணவர் சேமிப்பு

மாணவர்கள் சுன்னாகத்தில் இயங்கும் மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றில் தொடர்ச்சியாக சேமிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வங்கி உத்தியோகத்தர் பாடசாலைக்கு வந்து சேமிப்புக்களை பதிவு செய்கின்றனர்.

### வாசிப்பு மேம்பாட்டு நிகழ்வுகள்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொதுநூலகம், யாழ்ப்பாணம் பொதுநூலகம் என்பவற்றின் கருத்தரங்குகள், நடமாடும் நூலக சேவை, புத்தகக் கண்காட்சி மாணவர் கதைகூறல் என்பன நடைபெற்றன. அத்துடன் பெரும்பாலான மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் சுன்னாகம் நூலகத்தில் அங்கத்தவராக இருந்து புத்தகங்களை வாசிப்பதும் குறிப்பிடத்தக்கது.

### களப்பயணம்

அன்று யாழ்தேசியக் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சிக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கற்றல் உபகரணங்கள்

சுன்னாகம் 'சிசில்வேள்ட்' நிறுவனத்தால் எமது பாடசாலை மாணவர்களுக்கு அன்று வர்ணம் தீட்டும் போட்டி நடாத்தப்பட்டு பரிசில்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு எமது நன்றிகள்.

### சமய வைபவங்கள்

பாடசாலையில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. பொறுப்பாசிரியர் திருமதி ரோ.சண்முகநாதன் அவர்களுக்கு எனது நன்றிகள். இவ்வாறே ஒளி விழாவினை சிறப்பாக நடாத்திய செல்வி செ.ஜெயசிந் அவர்களிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

### விளையாட்டுப் போட்டி

இப்பாடசாலை பல விளையாட்டுப் போட்டி 07.02.2014 ஆம் திகதி நடைபெற்றது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திரு.ஐ.விஜயகாந்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக திருமதி ஜெ.மயில்வாகனம் (ஆசிரிய ஆலோசகர்) திருமதி. இ.கருணாநிதி (பிரதம நூலகர், சுன்னாகம் பொதுநூலகம்) ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவிருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் திரு.பொ.கணேசலிங்கம் கலந்து கொண்டார்.

### பாடசாலையின் தேவைகள்

1. 50' x 25' அளவு கொண்ட கட்டிடம் (நூலகம், கணனி அறை - மேற்தளம், அலுவலகம், ஆங்கில அலகு) - (கீழ்தளம்)
2. முறையான சிறுவர் பூங்கா
3. டி.வி.டி.பிளேயர்

### பிரிவுபசார வைபவம்

பாடசாலையில் 09 ஆண்டுகளாக கடமையாற்றி 2013.05.10 அன்று ஓய்வு பெற்ற அதிபர் திரு.ஐ.விஜயகாந்தன் அவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுபசார வைபவமும் 2013.02.03 அன்று பொறுப்பேற்ற புதிய அதிபர் திரு.இரா.ஜெயக்குமார் அவர்களிற்கான வரவேற்பு வைபவமும் 2014.05.10 அன்று ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. இவ் வைபவம் பதில் அதிபர் திருமதி சுபாஜின கண்ணன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

எமது நன்றிகள்

இவ் வைபவத்திற்கான பரிசுப் பொருட்களை வழங்கிய "ரூலிங்" நிறுவன உரிமையாளர் திரு.உருத்திரலிங்கம் அவர்களுக்கும் , சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் சித்திவிநாயகர் ஸ்ரேசனறி, துர்க்கா புத்தகசோலை, சிசில்வேள்ட் (சுன்னாகம்) ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஒலி பெருக்கி வசதிகளை ஏற்படுத்தித் தந்தமைக்காகவும் ரூலிங் நிறுவனத்திற்கு எமது நன்றிகள்.

சிற்றுண்டிகளை வழங்கி உதவிய தரம் 05 மாணவர்களின் பெற்றோர்களிற்கு எமது நன்றிகள்.

குத்துவிளக்கு, திரைச்சிலை என்பவற்றை தந்துதவிய வலிதெற்கு பிரதேசச் செயலகத்திற்கு வலிதெற்குப் பிரதேச சபைக்கும் எமது நன்றிகள்.

பிளாஸ்ரிக் கதிரைகளை தந்து உதவிய சுன்னாகம் பொதுநூலகத்திற்கும் எமது நன்றிகள்.

இந்த அறிக்கையை நேர்த்தியாகவும் விரைவாகவும் அச்சிட்டுத் தந்த இணுவில் வைரஸ் பதிப்பகத்திற்கும் எனது நன்றிகள்.

இந் நிகழ்வை கண்டுகளிக்க வந்த அனைத்து நெஞ்சங்களிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து அதிபர் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

2014.12.03

திரு இரா.ஜெயக்குமார்
(அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசு பெறுவோர்
## 2014 ம் ஆண்டு குடும்பமட்டப் போட்டிகள்
## தனி நிகழ்வு

திருக்குறள்

| | | |
|---|---|---|
| தரம் 1 | த.ஜொஷ்சி | நிலை 01 |
| தரம் 2 | நே.நிசானி | நிலை 01 |
| தரம் 5 | இ.நிதுசன் | நிலை 02 |

சித்திரப்போட்டி

| | | |
|---|---|---|
| தரம் 02 | பொ.யான்சியா | நிலை 02 |
| தரம் 03 | றே.ரிசானி | நிலை 03 |
| தரம் 04 | ஜெ.திலக்ஷன் | நிலை 02 |

குழு நிகழ்வு

பண்ணிசை

| | | |
|---|---|---|
| தரம் 02 | பொ.டெலென்ஸ், கி.சங்கீத், பொ.யான்சிகா ர.சகானா, ச.பிரசன்னா, ஜெ.வினுசியா | நிலை 03 |
| தரம் 03 | றே.ரிசானி, க.கிரிசாந், க.கிறோஜன், வ.கனிமுகன், பு.யனுஜன், ந.சோபிதா, கிருத்திகா | நிலை 03 |
| தரம் 04 | பா.ரிசான், தே.தேனுஜன், ப.தர்மினி, கு.கபீனா மோ.லோஜனா, வ.ஜெஸ்மினி | நிலை 02 |
| தரம் 05 | பு.திபிசான், ஜெ.ஜெனிஸ்ரன், பொ.விதுஷா க.கீர்த்திகா, ஜெ.லெசிந்தன் | நிலை 03 |

வாய்ப்பாடு

| | | |
|---|---|---|
| தரம் 03. | பு.ஜனுயன், க.கிறோஜன், ரே.ரிசானி க.கிரிசாந், டிஸ்ரிக் | நிலை 03 |
| தரம் 05 | ஜெ.லெசிந்தன், பு.திபிசான், இ.நிதுசன் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.விதுஷா, கிருத்திகா

காவடி

தரம் 03 கி.கிரிசாந், கி.கிறோஜன், பு.யனுஜன், வ.கனிமுகன்
டி.டிஸ்லிக் நிலை 02

தரம் 04 தே.தேனுஜன், ர.கஜீபன், பா.திசான், சி.டல்மினன்

தரம் 05 அனிஸ்ரன்

செயற்பட்டுமகிழ்வோம்

தரம் 03 டி.டிஸ்லிக், யோ.எஸ்ரோன், றே.ரிசானி, ர.கிருத்திகா,
வ.கனிமுகன், க.கிரிசாந்

தரம் 04 தே.தேனுஜன், பா.திசான், ச.கெட்வின், ஜெ.திலக்ஷன்
பா.தர்மினி, கு.கபீனா, மோ.லோஜனா, வ.ஜெஸ்மின்
தரம் 03

ஆங்கிலப்பாடல்

தரம் 03 பு.யனுஜன், கி.கிரிசாந், கி.கிறோஜன், வ.கனிமுகன்,
டி.டிஸ்லிக், றே.ரிசானி, சோபிதா
நிலை 03

தரம் 04 ஜெ.திலக்ஷன், ச.கெட்வின், பா.திசான், தே.தேனுஜன்
ர.கஜீபன், பா.தர்மினி, கு.கபீனா, மோ.லோஜனா,
வ.ஜெஸ்மின் நிலை 03

சிங்கள வினாடி வினா

தரம் 01 ஜெ.கம்சனா, ம.விஷ்ணுஜன், இ.யனுஷ்ரன்,
த.ஜொய்சி

தரம் 02 பொ.டெலென்ஸ், கி.சங்கீத், ர.சகானா,
பொ.யான்சிக்கா, ஜெ.வினுசியா
நிலை 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. பொ.விதுஷா — 132
2. பு.திபிஷான் — 119
3. க.கீர்த்திகா — 113
4. இ.விநுசன் — 106
5. ஜெ.லெசிந்தன் — 101

பாடசாலை மட்ட தமிழ்த்தின போட்டியில் பரிசில் பெறுவோர்

1. பாவோதல் — பு.திபிஷான்
2. பேச்சு — ஜெ.லெசிந்தன்
3. ஆக்கம் எழுத்து — க.கீர்த்திகா
4. ஆக்கத்திறன் வெளிப்பாடு — பா.திஷான்
5. வாசிப்பு — பு.திபிஷான்

2014 ஆம் ஆண்டிற்கான வரவொழுங்கு

1. தரம் 01 — செல்வி.ஜெ.கம்சனா
2. தரம் 02 — செல்வி.ர.சகானா
3. தரம் 03 — செல்வன்.க.கிருசாந்
4. தரம் 04 — செல்வன்.பா.திஷான்
5. தரம் 05 — செல்வன்.ரா.தேவரூபன்

2014 இல் பாடரீதியாக பரிசில் பெற்றோர் விபரம்

தரம் - 01

செல்வி.த.ஜொய்சி — கணிதம், சுற்றாடல், கிறிஸ்தவம்

செல்வி.ஜெ.கம்சனா — தமிழ், சைவசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 02

செல்வி.ர.சகானா — தமிழ், கணிதம், சுற்றாடல், சைவசமயம்
செல்வி.பொ.யான்சிகா — கத்தோலிக்கம்
செல்வன்.பொ.டெலன்ஸ் — சுற்றாடல்

தரம் - 03

செல்வி.றே.ரிசானி — தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
செல்வன்.வ.கனிமுகன் — சைவசமயம்
செல்வன்.யோ.எஸ்ரோன் — கிறிஸ்தவம்

தரம் - 04

செல்வன்.பா.திஷான் — தமிழ், சைவசமயம்
செல்வன்.ஜெயதர்சன் திலக்ஷன் — ஆங்கிலம், கிறிஸ்தவம்
செல்வி.கு.கபீனா — சுற்றாடல், கணிதம்

தரம் - 05

செல்வி.பொ.விதுஷா — தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்
செல்வி.க.கீர்த்திகா — தமிழ், கணிதம், சைவசமயம்

**ஆசிரியர்களுக்கான பரிசுகள்**

1. குறைந்த விடுமுறை (2014) பெற்ற ஆசிரியர்
   திருமதி ரோ.சண்முகநாதன்
2. முன்மாதிரியான பொறுப்பேற்றல்
   திருமதி சு.உதயகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன்
## பாடசாலைக் கீதம்

வாழிய! வாழிய! வாழிய – உடுவில்
மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை

சீலமும் வாய்மையும் சிறந்த நல் நீதியும்
சாலவும் போற்றி சாத்வீகம் வளர
கல்வி ஊற்றே மனிதம் என்பதால்
காசினி போற்றிட கலை வளர்சாலை – வாழிய

பைந்தமிழ் மொழியுடன் ஆங்கிலமும் வளர
பல்கலை அறிவும் பரந்தே வளர
உன்னதப் பண்புகள் உயர்ந்த இலட்சியங்கள்
ஊட்டியே மானிடம் ஆக்கிடும் சாலை – வாழிய

முத்தமிழ் சிறந்திட முதுநலம் வளர்ந்திட
உடலினில் உள்ளத்தில் உயர்வினில் உறுதி
நற்றவப் பயன்கள் வழங்கிடும் அதிபர்
ஆசான்கள், மாணவர் என்றென்றும் வாழிய – வாழிய

ஆக்கம் :- திருமதி பா – விஜயகாந்தன்
(2002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org